உ

திருச்சிற்றம்பலம்.

# சிவாலய தரிசனவிதி.

சைவசமயிகள் யாவருக்கும்

எளிதின் உபயோகமாகும்பொருட்டு,

நல்லூர்

## ஆறுமுகநாவலரவர்களால்

செய்து,

சிதம்பரசைவப்பிரகாசவித்தியாசாலைத் தருமபரிபாலகர்

பொன்னம்பலபிள்ளையால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

பத்தாம் பதிப்பு.

பிரமாதீச ஹு மாசிமீ.

(Copyright Registered.)

கணபதி துணை.

# சிவாலயதரிசனவிதி.

க. அநாதி முத்த சித்துருவாகிய முதற்கடவுள் சிவபெருமானே என்று துணிந்து, அவர் அருளிச்செய்த வேதாகமங்களிலே விதித்தபடி, தங்கள் தங்கள் வருணத்துக்கும் ஆச்சிரமத்துக்கும் ஏற்ப, அவரை மெய்யன்போடு வழிபடுவோர் சைவசமயிகள் என்று சொல்லப்படுவர்.

உ. கருணாநிதியாகிய சிவபெருமான், புறத்தே திருக்கோயிலுள்ளிருக்கும் சிவலிங்கம் முதலிய திருமேனியும் தமது மெய்யடியாருடைய திருவேடமும் ஆதாரமாகக் கொண்டு நின்றும், அகத்தே உயிர் இடமாகக்கொண்டு நின்றும், இங்குள்ளார் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர். ஆதலால், அவரை வழிபடும் இடங்கள் இவைகளேயாம்.

ங. சிவத்திரவியங்கவராமை, கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, பிறர்மனைநயவாமை, வரைவின்மகளிர் நயவாமை, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய் தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகள் இவ்வழிபாட்டுக்கு அங்கங்களாம். இவ்வழிபாடு அங்கியாம். ஆதலால், இந்நன்மைகள் இல்லாது செய்யும் வழிபாடு சிறிதும் பயன்படாதென்பது துணிவு.

ச. இவ்வழிபாடு செய்யும் சைவசமயிகளாலே தரிக்கற்பாலனவாகிய சிவசின்னங்கள் விபூதியும் உருத்திராக்ஷமுமாம். இவைகளைத் தரியாது செய்யும் சிவபுண்ணியங்கள் சிறிதும் பயன்படாவாம். இதற்குப் பிரமாணம்:—

### சைவசமயநெறி.

பரம சிவனமலன் பத்தர்க்குச் சின்னம்
உருவுடலிற் கண்டிபுநீ றும்.

பூணாது கண்டிசிவ பூசைபுரி வார்பலத்தைக்
காணார்பூ ணுய்கண்டி கை.

பூண்பதற்குக் கண்டியினைக் கூசியிடும் புல்லியரைக்
காண்பதற்குக் கூசுமரன் கைத்து.

### உருத்திராக்கவிசிட்டம்.

பூணாது கண்டியினைப் பூசைபுரி வார்பலத்தைக்
காணாரெனவே சுழறுமறை—நாணாதே
பூண்டுசிவ பூசைபுரி வார்புகுந்து மேற்புரத்துக்
காண்டிருப்ப ரீசன் கழல்.

### உபதேசகாண்டம், உருத்திராக்ஷமான்மியம்.

மெய்ய ரும்பிய வேர்வையின் விரிபுன லாட்டின்
மைய ரும்பிய மழையினின் மக்கண்மெய்ந் நெருக்கிற்
றெய்வ வெண்டிரு நீற்றணி சிதைதருஞ் சிதைந்தால்
வெய்ய பூதவெங் கழுதரா லரக்கரான் மெலிவார்.

அலங்கு மாமணி யுருத்திர வக்கமொன் றணியின்
விலங்கெ யிற்றுவெம் பூதமே முதலிய மேவா
பொலங்கொண் மாமணி புனைதரிற் போக்குரு திதனால்
இலங்கு மாமணி நீற்றொடும் புனைவதற் கிசையும்.

ரு. திருக்கோயிலுள்ளிருக்கும் சிவலிங்கம் பரார்த்த லிங்கம் எனப் பெயர்பெறும். அது சுயம்புலிங்கம், காணலிங் கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், மானுடலிங்கம் என ஐந்துவகைப்படும். அவற்றுள், சுயம்புலிங்கம் தானே தோன் றியது. காணலிங்கம் விநாயகர் சுப்பிரமணியர் முதலிய கணர்களாலே தாபிக்கப்பட்டது. தைவிகலிங்கம் விட்டுணு முதலிய தேவர்களாலே தாபிக்கப்பட்டது. ஆரிடலிங்கம் இருடிகளாலே தாபிக்கப்பட்டது. அசுரர் இராக்கதர்க ளாலே தாபிக்கப்பட்டதும் அது. மானுடலிங்கம் மனுட ராலே தாபிக்கப்பட்டது. மானுடலிங்கத்தின் உயர்ந்தது ஆரிடலிங்கம், அதனின் உயர்ந்தது தைவிகலிங்கம், அத னின் உயர்ந்தது காணலிங்கம், அதனின் உயர்ந்தது சுயம்பு லிங்கம். இதற்குப் பிரமாணம்:—

அருணகிரிபுராணம், வலம்புரிசருக்கம்.

மனிதர்தா பித்த லிங்க மாதவர் வானோர் மற்றைப்
புனிதராங் கணங்கள் பூசை புரிந்திடு மிலிங்கமென்றும்
பனுமிவை நான்குந் தானே படிதனி லுதித்த லிங்கம்
எனுமித னோடு மைந்தும் பரார்த்தமென் றெனுகவென்றும்.

உரைத்தவிவ்வைந்துமொன்றுக்கொன்றினில்வரமாயோங்கும்
வரத்தினையளிக்குமிந்தமுறையினால்வலஞ்செய்வார்க்கும்

சா. திருக்கோயிலிலே கர்ப்பக்கிருகத்தினுள்ளே சிவ லிங்கப்பெருமானைச் சூழ்ந்தவிடம் முதலாவரணம், அதற்கப் பாலுள்ளது இரண்டாமாவரணம், அதற்கப்பாலுள்ளது மூன்றுமாவரணம், அதற்கப்பாலுள்ளது நான்காமாவரணம், அதற்கப்பாலுள்ளது ஐந்தாமாவரணம், அதற்கப்பால் ஊரி ன்புறம் ஆறுமாவரணம். பிரதக்ஷிணபலம் முதலாவரணத்தி

னும்பார்க்க இரண்டாமாவரணத்தும், இரண்டாமாவரணத்தினும்பார்க்க மூன்றாமாவரணத்தும், மூன்றாமாவரணத்தினும்பார்க்க நான்காமாவரணத்தும், நான்காமாவரணத்தினும்பார்க்க ஐந்தாமாவரணத்தும், ஐந்தாமாவரணத்தினும்பார்க்க ஆறாமாவரணத்தும் அதிகமாம். இதற்குப் பிரமாணம்:—

அருணகிரிபுராணம், வலம்புரிசருக்கம்.

ஒப்பாரில்லான்சிவனமனுறையுங்கோயின்முதலதனுக்
கப்பாலிரண்டாமாவரணமூன்றாகுவதேயதற்கப்பால்
அப்பானலாமாவரணமைந்தாகுவதேயதற்கப்பால்
அப்பாலூரின்புறமதனோடாறும்வலஞ்செயாவரணம்.

ஆதிதன்னிற்புரிவலத்தினதிகமிரண்டாமாவரணத்
தோதுமிந்தமுறையிங்குமுயரும்பலமொன்றினுக்கொன்று
நாதனுயிர்கட்குயிர்நோய்க்குமருந்தனமலனம்பனவன்
பாதமலரைப்பரிந்துளத்தினினைந்துவலஞ்செய்வதுபாங்கே.

எ. படைப்புக்காலத்திலே சதாசிவமூர்த்தியுடைய ஐந்துமுகங்களினின்றுந்தோன்றிய காசிபர் முதலிய ஐந்திருடிகளுடைய கோத்திரத்திலே பிறந்த ஆதிசைவராகிய சிவப்பிராமணர்களுள், மனக்குற்றங்களும் உடற்குற்றங்களும் இல்லாதவர்களாய், சமயதீக்ஷை, விசேஷதீக்ஷை, நிருவாணதீக்ஷை, ஆசாரியாபிஷேகம் என்னும் நான்கும் பெற்றவர்களாய், வேதாகமங்களை ஓதியுணர்ந்தவர்களாய், நித்தியம், நித்தியாங்கம், நைமித்திகம், நைமித்திகாங்கம், காமியம், காமியாங்கம் என்னும் ஆறுகருமங்களையும் மந்திரம், பாவனை, கிரியை என்னும் மூன்றும் வழுவாவண்ணம் சிரத்தையோடு விதிப்படி செய்ய வல்லர்களாய், உள்ள சிவாசாரியர்களே பரார்த்தலிங்கபூசை செய்தற்கு அதிகாரிகள். இவர்க

ளல்லாத பிறர் பரார்த்தலிங்கத்தைத் தீண்டினும், அரச னுக்கும் உலகத்துக்கும் கேடு விளையும். இதற்குப் பிர மாணம்:—

## சைவசமயநெறி.

சிவன்முகத்தி லேசெனித்த விப்பிர சைவர்
இவரே யருச்சனைக்கென் றெண்.

அயன்முகத்திற் றோன்றிய வந்தணரர்ச் சித்துப்
பயனடைதற் கிட்டலிங்கம் பாங்கு.

பாங்கில்லை தீண்டப் பரார்த்த மிவர்தீண்டிற்
றீங்குலகுக் காமென்று தேறு.

## அருணகிரிபுராணம், வலம்புரிசருக்கம்.

அருச்சனை புரிக விந்த வைந்திலிங் கத்து மன்பாற்
றரித்தெழு நான் குமீசன் முகத்தினுற் பவித்த சைவர்.

வைதிகர் பெறினுஞ் சைவ தீக்கையை வாய்க்க வேதங்
கையினாற் பரார்த்த லிங்கந் தீண்டுதல் கடனோ வன்று
வையகந் தனக்கு நாசம் வருமிவர் தீண்டிற் சுத்த
சைவராற் பரிகா ரத்தைப் புரிகநூல் சாற்று மாற்றால்.

தரித்தபி டேக மந்தஞ் சுசியினாற் சுத்த சைவர்
அருச்சனை புரிக வொன்று மன்பினாற் பரார்த்த லிங்கந்
தரித்திடா னபிடே காந்தந் தாவர லிங்கந் தீண்டிற்
பரித்திடா வளத்தைப் பாரும் பார்த்திவற் காகும் பாவம்.

ஆதலால் வேந்த னாராய்ந் தடைவுற வபிடே காந்தம்
ஓதுநூன் முறையி னுள்ள வுத்தம னாலே யென்றும்
போதக புனிதன் றன்னைப் பூசனை புரிவித் தானேல்
ஆதிதன் சிவலோ கத்தி னமர்வன்பூ சகனு மங்கே.

## திருமந்திரம், திருக்கோயிலழிவு.

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றன்னை யர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்கும் பஞ்சமு மாமென்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே.

அ. பூசகராகிய சிவாசாரியர், கிழக்கு நோக்கிய சந்நிதியிலும் தெற்குநோக்கிய சந்நிதியிலும் வலப்பக்கத்தும், மேற்குநோக்கிய சந்நிதியிலும் வடக்குநோக்கிய சந்நிதியிலும் இடப்பக்கத்தும், நின்று, பூசைசெய்யவேண்டும். இதற்குப் பிரமாணம்:—

## அருணகிரிபுராணம், வலம்புரிசருக்கம்.

பூருவ திக்கு நோக்கும் புனிதன்முன் வலப்பா னிற்க
ஆருறத் தெற்கு நோக்கு மமலன்முன் னிற்க வவ்வா
றேருற மேற்கு நோக்கு மிறைவன்முன் னிடப்பா னிற்க
சீருறப் புரிவார் பூசை யிம்முறை சோம திக்கும்.

கூ. மனக்குற்றங்களும் உடற்குற்றங்களும் இல்லாதவர்களாய், சமயதீக்ஷை, விசேஷதீக்ஷை, நிருவாணதீக்ஷை என்னும் மூன்றும் பெற்றவர்களாய், சைவாகமங்களையும் சிவபுராணங்களையும் கற்றறிந்தவர்களாய், சிவபத்திமான்களாய் உள்ள சைவர்களே திருக்கோயிலை நடாத்துதற்கு அதிகாரிகளாவர். இம்மைப்பயனாகிய திரவியமுதலியவற்றைக் குறியாது, திருக்கோயிலைச் சிரத்தையோடு விதிப்படி நடாத்துவோர் இம்மையிலே சிவகீர்த்தியைப் பெற்றுப் பின்பு சிவபதத்தை அடைவர். இம்மைப்பயனைக் குறித்து அதிகாரங்களைப்பண்ணிச் சிவத்திரவியங்களைத் திருடுவோரும், முந்

தின படித்தரங்களைக் குறைத்தவரும், தண்டிக்கப்படுவர். இதற்குப் பிரமாணம்:—

## சிவதருமோத்தரம், சுவர்க்கநரகசேடவியல்.

இம்மைப்பயனைக்குறியாதேயிறைவன்றிருவாலயமதனுட்
செம்மைசிறக்கமாபூசைசெய்விப்பவரேசிறப்புடையார்
இம்மைப்பயனைக்குறித்தியற்றுமதிகாரியர்நாயுடலெடுப்பர்
புன்மைப்புலையனெனுமுடலும்பொருந்திவிடுவர்புகழினையே.

## கடம்பவனபுராணம்.

விழுங்கலாஞ் செந்நெருப்பைக் கடிக்கலாந் திண்சிலையை விடத்தை யாவி, அழுங்குரு வகையிழைத்துக் குடிக்கலாம் விடங்கொண்மிடற் றரனார் செம்பொன், பழங்கணுற்கவர்ந்து புசித் திடின்மிடற்றி லேபிடிக்கும் பயனில் யாக்கை, புழுங்கவே கழ லுமுயி ரொறுக்குமந்த விடந்தீர்வு புகலொ ணாதால்.

கங்கைவே ணியன்பொருளைக் கவர்தீம்ப ரிருக்கவது கவர் தற் குள்ளந், தங்கிமுயன் றவர்நினைத்தோ ரக்கணத்தி லழிவர வர் தாமு நிற்க, அங்கவர்தீ நட்புறுவோ ரவரொடு நட்பினர் குலம்வே ரறவே மாய்வர், வெங்கொடுந்தீ நரகடைவர் சத்திய ஞ்சத் தியமாணை விளம்பினே மால்.

ஈசனே முதலாந் தேவகா ரியவிக் கினஞ்செய்தோ ரிவர் பொருள் கவர்ந்தோர், ஆசிலான் மறையோர்க் கிடர்செய்தோரு ழலை யாக்குநோ யுட்சுர நோயர், பூசுநீ றணிபு மீசனு புரணங் கவர்ந்துபொய்க் குரம்பையிற் பூண்டோர், சீசியன் னவர்நோ யாரெடுத் துரைப்பர் செறிபுழுக் குட்டரோ கத்தர்.

துலங்குமா லவட்டம் விசிறிகள் கவர்ந்தோ ருட்டண துக்கவெம் பிணியர், பலங்கெழு மீசன் றிருப்பணிபூசை படித்த ரங் குறைத்ததீ நரகர், கலங்கவே செய்யு மலிப்பிணி வருத்தங்

காட்டுறு மருங்கய ரோகர், நிலங்கெழு மீசன் சமயத்தை நிந்தை நிகழ்த்தினோர் சலவாத நோயர்.

க0. திருக்கோயிலிலே காலந்தோறும் பூசை முதலியவை தவறாமல் விதிப்படி செயப்படல்வேண்டும். தவறினால், இராசாவுக்கும் உலகத்தாருக்குந் தீங்குவிளையும். இதற்குப் பிரமாணம்:—

## திருமந்திரம், திருக்கோயிலழிவு.

ஆற்றரு நோய்மிகு மவனி மழைகுன்றும்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்றிருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைக டப்பிடிற் றானே.

முன்னவ னார்கோயிற் பூசைகண் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றுங்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி
என்னரு ணந்தி யெடுத்துரைத் தானே.

கக. சைவசமயிகள் நாடோறுந் திருக்கோயிலிற் சென்று, சிரத்தையோடு விதிப்படி சிவதரிசனஞ்செய்து கொண்டு, வீட்டுக்குத் திரும்பல்வேண்டும்.

கஉ. சிவதரிசனஞ்செய்ய விரும்புவோர் சிவாலயத்துக்குச் சமீபத்தில் உள்ள சிவதீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ்செய்து, கரையிலேறி, சரீரத்துள்ள ஈரத்தை உலர்ந்த வஸ்திரத்தினாலே துவட்டி, நெற்றியில் விபூதி தரித்து, குடுமியை முடித்து, ஈரக்கௌபீனத்தைக் களைந்து, உலர்ந்த கௌபீனந்தரித்து, கைகளிரண்டையுஞ் சுத்தி செய்து, தோய்த்துலர்ந்தனவாய்க் கிழியாதனவாய் வெள்ளி

யனவாய் உள்ள சுத்தவஸ்திரம் இரண்டு அரையிலே தரித்து, அனுட்டானமும் செபமும் முடித்துக்கொண்டு, திருக்கோயிலுக்குப் போகக்கடவர். ஸ்நானம் முதலிய நியமங்கள் இல்லாது திருக்கோயிலுக்குப் போவோர் சிவநிந்தகரை ஒப்பர். இதற்குப் பிரமாணம்:—

சிவதருமோத்தரம், பாவவியல்.

சிவனையிகழுஞ்சிறியர்ரையனையார்சிவனைப்பூசனையை
உவகையுறவேகண்களிக்கவுருகிப்பரவாதுழல்வாரும்
அவனைச்சிவன்ருளருச்சகனையன்புசெய்யாதகல்வாரும்
புவனத்ததிபன்பவனத்துணியமத்தலதுபுகுவாரும்.

கங. திருக்கோயிலுக்குப் போம்பொழுது, ஒருபாத்திரத்திலே தேங்காய் பழம் பாக்குவெற்றிலை முதலியவை வைத்து, அரைக்குக் கீழ்ப்படாது மேலே உயர்த்தப்பட்ட கையில் ஏந்திக்கொண்டு, திருக்கோயிலுக்குப் போகக்கடவர். சிவபெருமானையும் சிவாக்கினியையும் ஆசாரியரையும் சேவிக்கப்போமிடத்து, வெறுங்கையுடனே போகாது, தம்மாலே கொடுத்தற் கியன்ற பதார்த்தத்தை அவர் சந்நிதியிலே வைத்து, வணங்குதலே தகுதி. பொருளில்லாதவன் பத்திர புட்பங்கள் கொடுத்து வணங்கல்வேண்டும். அதுவுங்கூடாதவன் சந்நிதியில் உள்ள செத்தை முதலியவற்றைப் போக்கி வணங்கல்வேண்டும். இதற்குப் பிரமாணம்:—

சிவதருமோத்தரம், பாவவியல்.

பரமன்றிருமுன்னமுன்முன்னும்பரமகுரவன்றிருமுன்னும்
ஒருமையுறவேவறுமையினுமுதவாதவருஞ்சிறிதேதும்
அரிதுபொருடான்பச்சிலையுமரிதோவஃதுமரிதாயிற்
றிருணமதனைத்திருமுன்னேமாற்றலரிதோசெயலாலே.

௧௪. திருக்கோயிலுக்குச் சமீபித்தவுடனே தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கி, இரண்டுகைகளையும் சிரசிலே குவித்துக்கொண்டு உள்ளே பிரவேசித்து, பத்திரலிங்கமாகிய பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்காரம் பண்ணக்கடவர். இதற்குப் பிரமாணம்:—

## சைவசமயநெறி.

குறித்துச் சிவனெனக் கோபுரத்தைப் பூவும்
பறித்தருச்சித் தேத்துகபாங் கால்.

## வருத்தமறவுய்யும்வழி.

தூலியினைக் கோபுரத்தை யீசனெனக் கண்டுதொழு
பாவமறும் வாய்த்துறுமின் பம்.

௧௫. ஆடவர் அட்டாங்கநமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்கநமஸ்காரமும், பண்ணல்வேண்டும். திரயாங்கநமஸ்காரம் இவ்விருவருக்கும் பொது. இதற்குப் பிரமாணம்:—

## சைவசமயநெறி.

அட்டாங்கத் தாற்புருட ரல்லாதார் பஞ்சாங்கம்
இட்டமுற மூன்றிருவர்க் கும்.

௧௬. அட்டாங்கநமஸ்காரமாவது தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டுறுப்பும் நிலத்திலே தோயும்படி வணங்குதல். பஞ்சாங்கநமஸ்காரமாவது தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்துறுப்பும் நிலத்திலே தோயும்படி வணங்குதல். திரயாங்கநமஸ்காரமாவது சிரசிலே இரண்டுகைகளையுங் குவித்தல். இதற்குப் பிரமாணம்:—

## சிவதருமோத்தரம், சிவஞானதானவியல்.

வலஞ்செய்து தண்டதனை மானவிதி வழிதழுவத்
தலந்தன்னிற் பணிந்தெழுக தலைகரமற் றிருகன்னந்
துலங்குமுக வாய்புயங்க ளெனுமெட்டுந் தோயமயிர்
இலங்குசிரங் கரமுழந்தா ளெனுமைந்து மிசைந்திடவே.

கஎ. நமஸ்காரம், மூன்றுதரமாயினும், ஐந்துதரமாயினும், ஏழுதரமாயினும், ஒன்பதுதரமாயினும், பன்னிரண்டுதரமாயினும், பண்ணல்வேண்டும். ஒருதரம் இருதரம் பண்ணுதல் குற்றம்.

கஅ. நமஸ்காரம் பண்ணுமிடத்து, மேற்கேயாயினும், தெற்கேயாயினும் கால் நீட்டல்வேண்டும். கிழக்கேயாயினும் வடக்கேயாயினும் கால் நீட்டலாகாது. இதற்குப் பிரமாணம்:—

## அருணகிரிபுராணம், வலம்புரிசருக்கம்.

உத்தர திசையிற் காலை நீட்டிட * லொருகா லத்தும்
இத்திறம் பதத்தை நீட்ட * லிந்திர திக்கி லென்றும்
பத்தர்கண் மேற்குந் தெற்கு நீட்டுக பாதந் தன்னை
வித்தக விலிங்கந் தன்னைப் பணிபவர் விரும்பி வீடும்.

தேசிகன் றன்னைத் தேவர் திருவடி தன்னையீச
னேசரைச் சந்திதோறு நிருமலன் றனையர்ச் சிக்கும்
பூசுரர் தம்மைத் தந்தை தாய்தனைப் பணியும்போதுங்
காசினைக் கடிவார் நீட்டல் * வடக்கினுங் கிழக்குங் காலே.

கக. கிழக்கு நோக்கிய சந்நிதியிலே பலிபீடத்துக்கு அக்கினிமூலையினும், தெற்கு நோக்கிய சந்நிதியினும் மேற்கு

---

* நீட்டிடல் = நீட்டற்க.

நோக்கிய சந்நிதியிலும் பலிபீடத்துக்கு நிருதிமூலையினும், வடக்கு நோக்கிய சந்நிதியிலே பலிபீடத்துக்கு வாயுமூலையினும், சிரசை வைத்து, மார்பு பூமியிலே படும்படி வலக்கையை முன்னும் இடக்கையைப் பின்னும் நேரே நீட்டிப் பின் அம்முறையே மடக்கி, வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகளை அரையை நோக்க நீட்டி, வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்னும் மண்ணிலே பொருந்தச்செய்து, நமஸ்காரம் பண்ணக்கடவர். இதற்குப் பிரமாணம்:—

## அருணகிரிபுராணம், வலம்புரிசருக்கம்.

பூருவ திசையை நோக்கும் புனிதன்முன் பலிபீ டத்தின்
ஏருறு மெரியின் கோணத் தெதிரணித் தெல்லை தன்னிற்
சீருறுஞ் சிரத்தை வைத்து நிலத்துறத் திணிய மார்பு
நேருறக் கரங்கடம்மை நீட்டியுத் தரத்து நேசால்.

மடக்கியே கரங்கடோளு மண்ணுறத் தெற்கே போக்கித்
திடத்தரை தன்னைத் தீண்டச் செறித்திரு கன்னந் தன்னை
முடிக்கவட் டாங்கந் தன்னை முந்தியே வலப்பால் செய்க
இடப்புறத் தங்கந் தன்னை யியற்றுக வதன்பி னென்றும்.

தென்றிசை தன்னை நோக்குஞ் சிவனது சந்நி திக்கண்
ஒன்றிய பலிபீ டத்தி னிருதிதிக் குறுங்கோ ணத்தின்
நின்றுமுன் னிகழ்த்து மாற்று னிமலனைப் பணிக மேல்பால்
ஒன்றிய சிவன்றன் முன்னு நிருதியிற் பணிக வோர்ந்தே.

வடதிசை தன்னை நோக்கு மலவலி வயிரி முன்னே
திடமுறும் பலிபீ டத்தின் வாயுகோ ணத்தைச் சேர்ந்தே
அடியிணை நீட்டி மேல்பா லமலனைப் பணிக வன்பால்
உடலுரை யுணர்வாலுற்ற தீவினை யொருவ வோர்ந்தே.

உ௦. பின்பகலிலே சூரியகிரகணமாயினும் சங்கிராந்தியாயினும் வரின், அப்பொழுது தரிசனஞ்செய்யப்போனவர், மேற்கே கால் நீட்டலாகாமையால், தெற்குநோக்கிய சந்நிதியிலும் வடக்கு நோக்கிய சந்நிதியிலும் அட்டாங்க பஞ்சாங்கநமஸ்காரம் பண்ணாது, திரயாங்கநமஸ்காரமாத்திரம் பண்ணல்வேண்டும். இதற்குப் பிரமாணம்:—

## அருணகிரிபுராணம், வலம்புரிசருக்கம்.

தினகரன் றன்னைப் பாம்பு தீண்டினே யபரா ணத்தின்
மனமகிழ் வுறவெல் லோர்க்கு மகரமா தாதி வாய்க்கின்
இனையகா லத்து மூழ்கி யீசனை யிறைஞ்சச் செல்வோர்
தனபதி திசையைத் தெற்கே நோக்கிய விலிங்கந் தன்னில்.

மேலைய திசையிற் காலை நீட்டிடல் வெய்யோ னந்த
வேலையி னுச்சி நீங்கி யியங்கலான் மேல்பா லந்தக்
காலையி லட்டாங் கத்தைக் காதல்செய் யாதே கைகள்
ஏலவே கூப்பி யுச்சி மேற்றெழ லினிமை யாமே.

உக. மேற்சொல்லியபடி நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டு, சிவபெருமானைச் சிறிதும் மறவாத சிந்தையோடு செபமாலையைக் கையில் வைத்துப் பஞ்சாக்ஷரசெபம் செய்துகொண்டாயினும், இரண்டுகைகளையும் இருதயத்திலே குவித்துக்கொண்டாயினும், பூரணகர்ப்பிணியானவள் காலிலே விலங்கு பூட்டப்பட்டவளாய் எண்ணெய் நிறைந்த குடத்தைச் சிரசின்மேல் வைத்துக்கொண்டு நடத்தல்போல, செந்துக்கள் வருந்துமேயென்று மனம் உருகிப் பூமியைப் பார்த்துக்கொண்டு கால்களை மெல்ல வைத்துப் பிரதக்ஷிணம் பண்ணக்கடவர். இதற்குப் பிரமாணம்:—

## அருணகிரிபுராணம், வலம்புரிசருக்கம்.

அடிதொறு மசுவ மேத யாகத்தின் பலம தாகும்
படிதனைப் பார்த்து மெல்லப் பதத்தினை வைத்துக் கீட
மடியுமெய் வருந்து மென்றே மனந்தனி லுருகிச் செல்க
அடிகளா லயத்து வட்டத் தகத்துனி யமலன் பாதம்.

நிறைந்த கர்ப்பிணிதா னெண்ணெய் நிறைகுடந் தலையின் மீதே
உறைந்திட நிகளங் காலி னுறமெல நடத்தல் போல
மறந்திடா தமலன் பாத மனத்துற வலமுஞ் செய்க
சிறந்தவைந் தெழுத்துஞ் செப்பிச் செபவடங் கரத்திற்சேர்த்தே.

உஉ. சிவபெருமானை மூன்றுதரமாயினும், ஐந்துதரமாயினும், ஏழுதரமாயினும், ஒன்பதுதரமாயினும், பதினைந்துதரமாயினும், இருபத்தொருதரமாயினும், பிரதக்ஷிணம் பண்ணல்வேண்டும். இதற்குப்பிரமாணம்:—

## சைவசமயநெறி.

எழுமூன்றல் லாலைம்மூன் றொன்பானே ழைந்து
வழுவலமூன் றுஞ்செய் வலம்.

## அருணகிரிபுராணம், வலம்புரிசருக்கம்.

உத்தம மூவேழாகும் வலம்பதி னைந்தோ டொன்பான்
மத்திம மாகு மற்றைக் கனிட்டமே ழைந்து மூன்றும்
இத்திறத் தியன்ற தொன்றை யியற்றுக விரண்டு மொன்றுங்
கைத்திடல் கணக்கே யாதி கடவுளைப் பணிவர் கண்டே.

உங. விநாயகரை ஒருதரமும், சூரியனை இரண்டுதரமும், பார்வதிதேவியாரையும் விட்டுணுவையும் நந்நான்குதரமும் பிரதக்ஷிணம் பண்ணல்வேண்டும். இதற்குப் பிரமாணம்:—

## அருணகிரிபுராணம், வலம்புரிசருக்கம்.

கணபதிக் கேக மாகுங் கதிரவற் கிரண்டே யாகும்
எணிலொரு மூன்றே யீசற் குமைதனக் கோனான் கேயும்
மணிவண ஞன மாலுக் கிரிரண் டாகு மன்னும்
விணின்மதி சூடிக் கின்னும் பலவிதம் விளம்பு வாமே.

உச. பிரதக்ஷிணம் பண்ணும் ஆவரணத்திலே தூபி நிழலேனும் துசத்தம்பநிழலேனும் இருப்பின், அந்நிழலில் மூன்றுகூறு நீக்கி எஞ்சிய இரண்டுகூற்றினுள்ளே செல்லக் கடவர். கடவுள் உற்சவங்கொண்டருளுங் காலத்திலே உடன்செல்லும்பொழுது அந்நிழலிருப்பினும் நீக்காது செல்லலாம். இதற்குப் பிரமாணம்:—

## அருணகிரிபுராணம், வலம்புரிசருக்கம்.

வலமிடம் புரிக சைவ தீக்கையோர் முதல்வட் டத்தின்
நிலவிடிற் றூபி நீழ னீக்கிமூன் றிரண்டுட் செல்க
விலகிடும் விரிவக் கோயி லுக்கெனைத் தனைத்தும் போகச்
செலுகவுத் தரத்திற் சோம சூத்திர மிதுதான் றேரில்.

திருவுலாச் செயும்போ தீசன் றிகழ்பெரு விழாவிற் பத்தர்
பரிவுற வுடனே செல்க படர்ந்தடிற் றூபி நீழல்
ஒருவுத லறவே சூழ்கை யொழுங்குடன் பலியிற் செல்வோர்
பிரிவறச் செல்கை தானும் பிழையன்று பேணுங் காலே.

உரு. அபிஷேககாலத்தில் உட்பிரகாரத்திலே பிரதக்ஷிணம், நமஸ்காரம் முதலானவை பண்ணலாகாது. இதற்குப் பிரமாணம்:—

மாசுபொதி கந்தரனுக் கபிடேக மாதி
மருவியகா லையிற் றுதித்தல் வலம்வரல்வந் தித்தல்
வீசொளிசே ருண்மதிலில் விரவியிட லாகா
விளங்குமதி யாவரணம் வியப்புறவுண் டாமேல்

நேசமுற வேவணங்கல் வலம்வரல்வந் தித்த
 னிணைப்பரிய செபம்புரித னிமலனைநெஞ் சமுத்தல்
பாசமற வியோகிருத்தல் பரன் சரிதை படித்தல்
 பலகலையோ திடலாகு மெனவரனூல் பகரும்.

உசு. பிரமசாரிகள் வலம்வரக்கடவர். கிருகத்தரும் வானப்பிரத்தரும் வலமும் இடமுமாக வரக்கடவர். சந்நியாசிகள் இடம்வரக்கடவர். வலஞ்செய்தலினாலே போகமும், இடஞ்செய்தலினாலே மோக்ஷமும், வலமுமிடமுஞ்செய்தலினாலே போகமோக்ஷமும், உண்டாகும். இதற்குப் பிரமாணம்:—

## அருணகிரிபுராணம், வலம்புரிசருக்கம்.

வலம்புரிந் திடுக வாதி மண்டலம் பிரமசாரி
வலம்புரிந் திடமுஞ் செய்க மனையுளார் வனத்து ளாரும்
இலந்துறந் திரந்துண் பார்க ளிடம்புரிந் திடுக வென்றும்
விலங்கென வுடலந் தன்னை வெறுத்தது மெய்யே யாயின்.

புத்தியாம் வலத்தினாலே பொருவரி தாய நல்ல
முத்தியா மிடத்தி னாலே முறையுற விரண்டுஞ் செய்யிற்
புத்தியு முத்தி தானும் பொருந்திடும் போதந் தன்னில்
வைத்தம லன்பொற் பாதம் வாக்கினால் வாழ்த்து வார்க்கே.

உஎ. வலமு மிடமுஞ் செய்தல் கார்ப்பக்கிருகத்தில் என்று சுவாயம்புவத்திலே சொல்லப்பட்டது. கார்ப்பக்கிருகத்துப் பிரதக்ஷிணம் பூசகராகிய சிவப்பிராமணருக்கு மாத்திரம் விதிக்கப்பட்டது. கார்ப்பக்கிருகத்திலே சிவலிங்கச் சாயையையும் நிருமாலியத்தையும் சோம சூத்திரத்தையும் கடவாது வலமிடஞ்செய்தல் வேண்டும். கார்ப்பக்கிருகத்தில் வலமிடமும், வெளிப்பிரகாரங்களில் வலமும், செய்தல் வேண்டுமென்று காலோத்தரத்தில் விதிக்கப்பட்டது.

உஅ. தாம் பிரதக்ஷிணம்பண்ணும் ஆவரணத்தில் உள்ள பலிபீடத்தையும் இடபத்தையும் சேர்த்துப் பிரதக்ஷிணம் பண்ணக்கடவர். தாம் பிரதக்ஷிணம் பண்ணும் ஆவரணத்திலே பலிபீடமும் இடபமும் இல்லையாயின் அதற்கு வெளிப்பிரகாரத்தில் உள்ள பலிபீடத்தையும் இடபத்தையும் சேர்த்துப் பிரதக்ஷிணம் பண்ணக்கடவர். சிவலிங்கத்துக்கும் அந்த அந்த ஆவரணத்தில் உள்ள பலிபீட இடபங்களுக்கும் இடையே போகலாகாது. இப்படிக் காலோத்தராகமத்திலே சொல்லப்பட்டது.

உகூ. மேற்சொல்லியபடி பிரதக்ஷிணம்பண்ணிச் சந்நிதானத்திலே நமஸ்காரஞ்செய்து, எழுந்து கும்பிட்டு, துவாரபாலகரை வணங்கி, பின்பு கணநாயகராகிய திருநந்திதேவரை வணங்கித் துதித்து, "பகவானே, உம்முடைய திருவடிகளை அடைந்த அடியேன் உள்ளே புகுந்து சிவபெருமானைத் தரிசித்துப் பயன்பெறும்பொருட்டு அநுமதி செய்தருளும்" என்று பிரார்த்தித்துக்கொண்டு, உள்ளே போகக்கடவர்.

௩௦. முன்னே விக்கினேசுரருடைய சந்நிதியை அடைந்து, இருகைகளையுங் குவித்து அவரைத் தரிசித்து மனசிலே தியானித்து, முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினலும் நெற்றியிலே மும்முறை குட்டி, வலக்காதை இடக்கையினலும் இடக்காதை வலக்கையினலும் பிடித்துக்கொண்டு மும்முறை தாழ்ந்தெழுந்து, தோத்திரம் பண்ணக்கடவர்.

௩க. பின்பு இருகைகளையுஞ் சிரசிலே குவித்துக்கொண்டு சிவபெருமானுடைய சந்நிதியை அடைந்து, அவ

ரைத் தரிசித்து மனசிலே தியானித்து, சிரசிலும் இருதயத் திலும் அஞ்சலிசெய்து, மனங்கசிந்துருக, உரோமஞ்சிலிர்ப்ப, ஆநந்த அருவி சொரிய, முப்பத்திரண்டிராகங்களுள் அவ்வக்காலத்துக்கு ஏற்ற இராகத்துடனே தோத்திரங்களைச் சொல்லக்கடவர்.

ருஉ. உத்தமோத்தமமாகிய தோத்திரங்கள் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் என்னும் அருட்பாக்களைந்துமாம்.

ருரு. சிவபெருமானைப் பூசகரைக்கொண்டு வில்வத்தினாலே அருச்சனைசெய்வித்து, விதிப்படி சுத்திசெய்யப்பட்ட பழமுதலியவற்றை நிவேதிப்பித்து, கர்ப்பூராராத்திரிகம் பணிமாறப்பண்ணி, பூசகருக்கு இயன்ற தக்ஷிணைகொடுக்கக் கடவர்.

ருச. சிவப்பிராமணர்கள் கர்ப்பக்கிருகத்திலும், பிராமணர்கள் அர்த்தமண்டபத்திலும், க்ஷத்திரியர் மகாமண்டபத்திலும் புகுந்து, சிவமூலமந்திரத்தினாலே புஷ்பாஞ்சலி செய்யக்கடவர். வைசியர் இடபத்துக்கு முன்னும், சூத்திரர் இடபத்துக்குப் பின்னும், கோமயத்தினாலே சதுரச்சிரமாக இடம்பண்ணி, சிவமூல மந்திரத்தினால் அருச்சிக்கக்கடவர். இப்படி அஞ்சுமான் என்னும் ஆகமத்திலே சொல்லப்பட்டது.

ருரு. பின்பு சபாபதி, தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளையும் சமயாசாரியர்கள் நால்வரையும் தரிசித்து வணங்கித் துதிக்கக்கடவர்.

௩௬. அதன்பின் பார்வதிதேவியாருடைய சந்நிதியை அடைந்து, சிரசிலும் இருதயத்திலும் அஞ்சலிசெய்து, அவரைத் தரிசித்து, மனசிலே தியானித்து, அருச்சனைமுதலியன செய்வித்து, தோத்திரங்களைச் சொல்லக்கடவர்.

௩௭. இறுதியில் விபூதி வாங்கித் தரித்துக்கொண்டு, பிரதக்ஷிணஞ்செய்து, சண்டேசுரர் சந்நிதியை அடைந்து, வணங்கித் தோத்திரஞ்செய்து, தாளத்திரயம்பண்ணிச் சிவதரிசனபலத்தைத் தரும்பொருட்டுப் பிரார்த்திக்கக்கடவர்.

௩௮. அதன்பின் நந்திதேவரை அடைந்து வணங்கித்துதித்து, பலிபீடத்துக்கு இப்பால் வந்து, மும்முறை நமஸ்கரித்து, எழுந்து, வடக்குநோக்கி இருந்து சிவபெருமானைத் தியானித்துக்கொண்டு, பஞ்சாக்ஷரத்தில் இயன்ற உருச்செபித்து, எழுந்து வீட்டுக்குப்போகக்கடவர்.

௩௯. தரிசனஞ்செய்து திரும்பும்பொழுது, சிவபெருமானுக்கும் இடபதேவருக்கும் புறங்காட்டாது திரும்பல் வேண்டும்.

௪௦. சிவதரிசனம் பிராதக்காலத்திலே செய்தால் இராவிலே செய்த பாவம் போம், மத்தியானத்திலே செய்தால் பிறந்தநாட்டொடங்கிச் செய்த பாவம்போம். சாயங்காலத்திலே செய்தால் ஏழுபிறவிகளிற் செய்த பாவம்போம். ஆதலால், சைவசமயிகள் யாவரும் எந்நாளும் காலந்தோறும் தவறுமல் விதிப்படி மெய்யன்போடு சிவதரிசனஞ் செய்யக்கடவர்.

௪௧. சோமவாரம், அட்டமி, பிரதோஷம், பௌர்ணிமை, அமாவாசை, திருவாதிரை, உத்தராயணம், தக்ஷி

ஞாயநம், சித்திரைவிஷு, ஐப்பசிவிஷு, மாசப்பிறப்பு, சூரியகிரகணம், சந்திரகிரகணம், சிவராத்திரி முதலிய புண்ணியகாலங்களிலே சிவதரிசனஞ்செய்தல் மிகமேலாகிய சிவபுண்ணியம்.

சஉ. சிவபெருமானை மனசினாலே தியானித்துக் கொண்டும் பஞ்சாக்ஷரத்தை வாக்கினாலே உச்சரித்துக் கொண்டும் சூரியோதயந்தொடங்கி அத்தமயபரியந்தமாயினும் ஒருயாமமாயினும் அங்கப்பிரதக்ஷிணஞ்செய்தவர் தீவினைகளெல்லாவற்றினின்றும் நீங்கி, முத்தியை அடைவர். இதற்குப் பிரமாணம்:—

## அருணகிரிபுராணம், வலம்புரிசருக்கம்.

வைத்தமல னடிமனத்துள் வாக்கினெழுத் தைந்தினையு மருக்கன் ரேற்றந், அத்தமய பரியந்தம் வலம்புரிந்தார் சிவாலயந்த மாக்கை யாலே, கைத்தவல வினையனைத்துஞ் சுத்தசிவ தத்துவத்திற் கலந்து வாழ்வர், முத்தியினைப் பெறுவார்க ளண்டமெலா மொடுங்கிடுநாண் மூலந் தன்னில்.

ஒருயாமம் வலம்புரியி னுடலினாற் றீவினைக ளொருவு மெல்லாங், கருவாதை யிலர்மண்ணிற் சிவலோக மடைந்துகளிப் புறவே வாழ்வர், பெருகார்வத் தொடுமேலைச் சிவலோகம் பெற்றிருப்பர் பேத மற்றே, பரமேசன் பதமடைவ ரண்டமெலா மாயையினுட் படியும் போதில்.

சங. இடபதேவரைத் தரிசித்து, அங்குநின்றும் இடமாகச் சென்று, சண்டேசுரரைத் தரிசித்து, சென்றவழியே திரும்பிவந்து மீண்டும் இடபதேவரைத் தரிசித்து, அங்குநின்றும் வலமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்து, கோமுகையைக் கடவாது, முன்சென்றவழியே திரும்பி

வந்து இடபதேவரைத் தரிசித்து, அங்குநின்றும் இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து, அங்குநின்றும் திரும்பி, இடபதேவரைத் தரிசியாது வலமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்து, அங்குநின்றும் திரும்பி வந்து, இடபதேவரைத் தரிசியாது இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து, திரும்பிவந்து இடபதேவரைத் தரிசித்து, பின்பு சிவலிங்கப்பெருமானைத் தரிசித்து வணங்குதல் சோமசூத்திரப்பிரதக்ஷிணம் எனப் பெயர்பெறும். பிரிந்து வரும்பொழுது ஆன்மப்பிரதக்ஷிணம் பண்ணல்வேண்டும். இப்படி ஒரு பிரதக்ஷிணஞ்செய்யின், அநந்தமடங்கு பயனுண்டு. இந்தப் பிரதக்ஷிணம் பிரதோஷகாலத்திலே செய்யின், மிக விசேடமாம். இதற்குப் பிரமாணம்:—

## அருணகிரிபுராணம், வலம்புரிசருக்கம்.

தெரிசித்துத் திடவிடையைச் சென்றிடஞ்சண் டேசன்
  திருவடியைத் தெரிசித்து மீண்டுதிட விடையைத்
தெரிசித்துச் சென்றுவலஞ் சோமதிசை சேர்ந்து
  மீண்டிடபந் தெரிசித்துத் திகழ்சண்ட னடியைத்
தெரிசித்துப் பராந்தி யெனுஞ்சோமஞ் சேர்ந்து
  மீண்டுதிறற் சண்டனடி தெரிசித்து விடையைத்
தெரிசித்துச் சிவலிங்கந் தெரிசித்துப் பணிக
  விதுசோம சூத்திரமொன் றனந்தபலஞ் செயுமே.

## கடம்பவனபுராணம்.

விடைசண்டன் விடைசோம சூத்திரம்வெள் விடைதொழுது விளங்குஞ் சண்டன், புடைகொண்ட சோமசூத் திரமீண்டுஞ் சண்டன்மழ விடையைப் போற்றி, நடைகொண்ட பேரன்பின் வணங்கிஞெரு வலமிவ்விதி நன்காச் செய்யின், அடைகொண்ட பிரதோடத்தடிக்கொரயமேதம்வினை யனைத்தும்போமால்.

சச. சுக்கிலபக்ஷம் கிருஷ்ணபக்ஷம் என்னும் இரண்டு பக்ஷத்தும் வருகின்ற திரயோதசி திதியிலே சூரியாஸ்தமயனத்துக்கு முன் மூன்றே முக்கால் நாழிகையும் பின் மூன்றேமுக்கால் நாழிகையுமாய் உள்ள காலமே பிரதோஷம் எனப்படும். விட்டுணு முதலிய தேவர்கள் தாங்கள் திருப்பாற்கடல் கடைந்தபோது ஆலாகலவிஷம் தோன்றக் கண்டு அஞ்சி ஓட்டெடுப்ப, அது அவர்களை வலமும் இடமுமாக மறித்துத் தொடர்ந்தது; அவர்கள் திருக்கைலாயத்திற் சென்று, இடபதேவருடைய அண்டத்தில் ஒளித்தார்கள். அவர்களை ஆலாகலவிஷம் பின்றொடர்ந்து வரும்போது சிவபெருமான் இடபதேவருடைய இரண்டு கொம்பினடுவே இருந்து அவ்விஷத்தைத் திருக்கரத்திலேற்று உட்கொண்டு, அவர்களைக் காத்து, அக்கொம்பினடுவே நின்று நிருத்தஞ்செய்தருளினார். இது சனிவாரத்திலே திரயோதசி திதியிலே சாயங்காலத்திலே அர்த்தமண்டல சமயத்திலே நிகழ்ந்தது. ஆதலால் சனிப்பிரதோஷம் மிகச்சிறந்தது. இப்பிரதோஷவரலாறு வேறொருபிரகாரமாகவுஞ் சொல்லப்படும். ஏகாதசியின் மாலைக்காலத்திலே சிவபெருமான் ஆலாகலவிஷத்தை உண்டு தேவர்களைக் காத்தருளினார். துவாதசியிலே அமிர்தந்தோன்ற, தேவர்கள் அதை உண்டு, திரயோதசியின் மாலைக்காலத்திலே சிவபெருமானைப் பூசித்து வணங்கினார்கள். அப்பொழுது சிவபெருமான் இடபத்தின்மேனின்று அருள்செய்தார். இப்பிரதோஷத்திலே இடபதேவருடைய அண்டத்தைப் பரிசித்து, அவருடைய இரண்டு கொம்பினடுவே பிரணவத்தோடுகூட ஹர ஹர என்று சொல்லி, சிவலிங்கப்பெருமானைத் தரிசித்தல்வேண்டும்.

சரு. பிரதோஷகாலத்திலே மெய்யன்போடு சிவதரிசனஞ் செய்யின், கடன், வறுமை, நோய், பயம், கிலேசம், அவமிருத்து, மரணவேதனை, பாவம் என்னும் இவைகளெல்லாம் நீங்கும், முத்தி சித்திக்கும். இதற்குப் பிரமாணம்:—

## கடம்பவனபுராணம்.

இரண நல்குர விரும்பவ மிரும்பசி யுரோகம்
அரணு றும்பயங் கிலேசங் கேதம்மவ மிருத்து
மரண வேதனை யிவையெலா மகற்றென வணங்கிப்
புரண நாதனைப் பிரதோடத்திற் போற்றிடத் தகுமால்.

அத்தமய முன்பின்மூன் றேமுக்காற் கடிகையதூஉம் விசேட மாகும், பத்தியினு லக்காலம் பரம்பரனைத் தரிசிப் போர் பவங்க ணீங்கி, முத்தியடைந் திடுவர்முன மொழிந்தப தின் மூன்றுநாட் பிரதோ டத்திற், சித்தமுற வான்மார்த்தம் பூசிக்குந் திறம்புகல்வாந் தெளிந்து கேண்மின்.

சசு. திருக்கோயிலிலே செய்யத்தகும் சிவபுண்ணியங்களாவன, நாடோறும் சூரியன் உதிக்குமுன் எழுந்து ஸ்நானஞ்செய்து அனுட்டானம் முடித்துக்கொண்டு வந்து மெல்லிய மார்ச்சனியினாலே கிருமிகள் சாவாமல் மேற்படத் திருவலகிடுதலும், ஈன்றணிணியதும் நோயினதுமல்லாத பசுவினது சாணியைப் பூமியில் விழுமுன் இலையில் ஏற்றாயினும், அது கூடாதாயிற் சுத்தநிலத்தில் விழுந்த சாணியை மேல்கீழ் தள்ளி நடுப்பட எடுத்தாயினும், வாவி நதி முதலியவற்றில் வடித்தெடுத்துக் கொண்டுவந்த நீரோடு கூட்டித் திருமெழுக்குச் சாத்தலும், திருநந்தனவனத்திலே விதிப்படி பூக்களைக் கொய்து பழுது நீக்கித் திருமாலைகட்டிச் சிவ

பெருமானுக்குச் சாத்துவித்தலும், சிவசந்நிதியிலே தமிழ் வேதத்தைப் பண்ணோடு பாடுதலும், அதனைச் சாரங்கியில் ஏற்றி வாசித்தலும், சிவதோத்திரங்களைச் சொல்லிக் கைகொட்டி ஆனந்தக் கூத்தாடுதலும், சுகந்ததூபம் இடுத லும், திருவிளக்கேற்றுதலும், சிவபுராணங்களை வாசித்துப் பொருள்சொல்லுதலும், அதனைக்கேட்டலும், பிராகாரங்க ளில் உள்ள புல்லைச் செதுக்குதலும், தங்கள் தங்கள் செல் வத்துக்கு ஏற்பத் திருப்பணியும் பூசையுஞ் செய்வித்தலும், பிறவுமாம். இதற்குப் பிரமாணம்.—

### திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்.

*நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா*
*நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்*
*புலர்வதன்மு னலகிட்டு மெழுக்கு மிட்டுப்*
*பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்*
*தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்*
*சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்*
*அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீ யென்று*
*மாரூரா வென்றென்றே யலறா நில்லே.*

*பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்த ராகி*
*அரும்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தை யுள்ளே வைத்து*
*விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினா லிடவல் லார்க்குக்*
*கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர்வீ ரட்ட னாரே.*

*விளக்கினாற் பெற்ற வின்ப மெழுக்கினாற் பதிற்றி யாகுந்*
*துளக்கினன் மலர்தொ டுத்தாற் றூயவிண் ணேற லாகும்*
*விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞான மாகும்*
*அளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகடா மருளு மாறே.*

## சைவசமயநெறி.

சென்று லயத்துட் டிருவலகிட் டேமெழுகித்
துன்றுமலர் கொய்துதொடுத் து.

ஆதரவி னாலே யமலன் முடிக்கணிவித்
தோதித் துதியு முகந்து.

நலங்கொளகி லாலு நறும்புகையுங் காட்டி
இலங்கிடவா னெய்விளக்கு மிட்டு.

செல்வத்தி னுக்கிசையச் செய்து திருப்பணியும்
அல்லலறுத் தாளென் றழுது.

## உபதேசகாண்டம், சிவபுண்ணியமான்மியம்.

சினக ராலயந் தூர்ப்பது திருமெழுக் கிடுதல்
புனன்மு கந்தெமை யாட்டுவித் தெமக்கெனப் புரிதல்
தினனு மாலயத் தகவையி னெழுந்தபுற் சீத்தல்
நனை நறுந்துணர் நாண்மல ரெடுத்துட னல்கல்.

## மேற்படி, சிவபுராணமான்மியம்.

வேட்டு நிற்சிவ பதவியே வேட்டுற விரும்பிக்
கேட்டு நிற்சிவ புராணமே கேட்டுற வினைகொண்
டாட்டு மன்பதை யீறுகண் டந்தகன் றூதர்
வீட்டு முன்னரே சிவத்தினில் விருப்புற வேண்டும்.

எந்தை கோயிலுட் டிருமுறை மண்டப மெடுத்துத்
தந்த பீடிகைத் தலத்தினிற் றிருமுறை தந்து
சிந்தை யன்பினோ டாங்கவைக் கருச்சனை செய்தால்
உந்து மேற்றினன் பிரதிட்டை கோடியொப் புறுமால்.

புண்ணி யச்சிவ புராணமோ திப்பொருள் விரிப்பின்
அண்ண லாலய நதிக்கரை குளக்கரை யன்றேன்
மண்ணு றுந்திரு மடமெனு மித்தலை மருவிக்
கண்ணு தற்பர னைத்தொழு தோதுறக் கடவார்.

சஎ. திருக்கோயிலிற் செய்யலாகாத குற்றங்களாவன, ஆசாரமில்லாதுபோதல், கால்கழுவாது போதல், சனனுசௌச மரணுசௌசத்தோடு போதல், எச்சிலுமிழ்தல், மலசலங்கழித்தல், மூக்குநீர்சிந்துதல், அபானவாயுவிடுதல், பாக்குவெற்றிலையுண்டல், தம்பலமுமிழ்தல், போசனபானம் பண்ணுதல், நித்திரைசெய்தல், க்ஷௌரம்பண்ணுவித்துக் கொள்ளுதல், எண்ணெய்தேய்த்தல், தலைபார்த்தல், மயிர் கோதிமுடித்தல், சூதாடல், சிரசிலே வேட்டிகட்டிக்கொள்ளுதல், தோளிலே யுத்தரீயமிட்டுக்கொள்ளுதல், போர்த்துக் கொள்ளுதல், சட்டையிடுதல், வாகனமேறிச்செல்லுதல், குடைபிடித்துக்கொள்ளுதல், தீவர்த்தி பிடித்துக்கொள்ளுதல், உன்னததானத்திருத்தல், ஆசனத்திருத்தல், தூபிதுசத்தம்பம் பலிபீடம் இடபம் விக்கிரகம் என்னும் இவைகளின் சாயையை மிதித்தல், விக்கிரகத்தையும் நிர்மாலியத்தையுந் தீண்டுதல், திருவிளக்குச்சாயையிலும் சிவலிங்கச் சாயையிலும் தன்னிழலிடுதல், பெண்களைப் புகழ்தல், பெண்களைத் தீண்டல், பெண்களை இச்சித்துப்பார்த்தல், பெண்களைப் புணர்தல், தெற்குநோக்கிய சந்நிதியிலும் கிழக்குநோக்கிய சந்நிதியிலும் இடப்பக்கத்தில் நமஸ்காரமும் செபமும் பண்ணுதல், ஒருதரம் இருதரம் நமஸ்கரித்தல், ஒருதரம் இருதரம் வலம் வருதல், ஓடி வலம்வருதல், சிவபெருமானுக்கும் இடபதேவருக்கும் குறுக்கே போதல், அவர்களுக்குப் புறங்காட்டுதல், ஒருகை குவித்தல், அகாலத்திலே தரிசித்தல், சிவபெருமானுக்கும் பலிபீடத்துக்கும் இடையே நமஸ்கரித்தல், வீண்பேசுதல், அசப்பியம்பேசுதல், அசப்பியங்கேட்டல், சிரித்தல், வீண்கீதம்பாடல், வீண்கீதங்கேட்டல், தேவத்திரவியத்தை இச்சித்தல், கீழ்மக்களைப் புகழ்

தல், மேன்மக்களை யிகழ்தல், துர்த்தேவதைகளை வழிபடுதல், சிவபெருமானை முற்பக்கத்தும் பிற்பக்கத்தும் இடப்பக்கத்தும் நின்று வணங்குதல், திருவிளக்கவியக் கண்டும் தூண்டாதொழிதல், திருவிளக்கில்லாதபொழுது வணங்குதல், உற்சவங்கொண்டருளும்பொழுது அங்கேயன்றி உள்ளே போய் வணங்குதல், குரவர் முதலியோரை வணங்குதல் முதலியனவாம். சிவதீர்த்தம் திருநந்தனவனம் திருமடம் என்னுமிவைகளிலும் மலசலங்கழித்தல், எச்சிலுமிழ்தல், மூக்குநீர்சிந்துதல், புணர்ச்சி முதலிய அசுசிகளைச் செய்யலாகாது. இக்குற்றங்களுள் ஒன்றை அறியாது செய்தவர் உருத்திரஞ் செபிக்கின், அக்குற்றம் நீங்கும். உருத்திரத்துக்கு உரியரல்லாதவர் அகோரமந்திரத்தில் ஆயிரம் உருச்செபிக்கின், அக்குற்றம் நீங்கும். இக்குற்றங்களை அறிந்துசெய்தவர் நரகத்தில் விழுந்து வருந்துவர், அவருக்குப் பிராயச்சித்தம் இல்லை. இதற்குப் பிரமாணம்:—

## கடம்பவனபுராணம்.

எச்சில்கான் றுமிழ்தன் மலசலம் விடுத்த லின்மொழி மடந்தையர்ப் புணர்தல், அச்சமொன் றின்றி யன்னரை நினைத்தல் பாகிலை யருந்தல்பொய் பகர்தல், நச்சியே துயிற றம்பல முமிழ்த லன்னியர் தாரத்தை விரும்பல், வர்ச்சனஞ் செய்யு மசுசியே திழவு மனநினை யாதன நினைத்தல்.

கோமுகை சிவனின் மாலியங் கடத்தல் பலிபீடங் குறுக்கிடல் பலிப்பற், றேமுற மிதித்த லேறெடு தூபி துவசதண்டியற்பலி பீடம், மாமைசே ரிலிங்க மைந்தனின் சாயை மிதித்தனீ றணியாது வருதல், தமமார் விளக்குச் சாயைநல் லிலிங்கச் சாயையிற் றன்னிழ லிடுதல்.

பரிவுற நிருவா ணத்தொடு புகல்பா தங்கழு வாதுபோந் திடுதல், ஒருவலம் வருதல் வலம்வரு போதி லோடியே வல ம்வர லிந்த, மருவரும் பெரிய குற்றமென் ஞன்குஞ் சார்ந் திடா வாறுகோ யிலுட்சென், றிருவருங் காணு ஈமையவண் சேவை செய்பவ ரெம்முல கிருப்பார்.

ஆசனத் திருத்தன் மயிரது களைத லாசையுற் றிடலெண் ணெய் தேய்த்தல், வாசநெய் தேய்த்தல் கஞ்சுகந் தரித்த றலை பார்த்தன் மயிர்கோதி முடித்தல், போசனஞ் செய்த னறியநீர் பருகல் பொருந்துவா கனங்களிற் போதல், ஏசறு வட்டக் குடை நிழற் சேற லியாரையு மிகந்துதூ டித்தல்.

வண்டுகில் போர்த்து வலம்புரிந் திடுதல் வணங்குதல் சேவைசெய் திடுதன், மிண்டுறு கோபங் கொண்டிடல் சிரசில் வேட்டிகட் டிக்கொடு தொழுதல், கொண்டொளி விளங்குந் தீவர்த்தி பிடித்துக் கொள்ளுத லகாலத்திற் குறுகல், எண்டகு சிவனை முன்னேடு பின்னு மிடப்புறத் தினிலுநின் றேத்தல்.

சிவதிர வியங்கள் கவர்தல்சூ தாடல் செய்திட லொரு நமக் கார, நவையறு கர்ப்பக் கிருகத்திற் செபங்க ளோமங்க ணமக்காரம் புரிதல், இவையெலா மன்றி யாலயக் குற்ற மின் னமு மநேகமுண் டியம்பில், அவையெலா நீக்கி விதிமுறை சே வை செய்பவர் நம்பத மடைவார்.

எங்கடே சிகனே பெரியனுங் குரவ னிழிஞனென் றெதி ர்ந்துதர்க் கித்தோர், பங்கமா முடக்கு வாதத்தர் பார்த்தோர் கேட்டவர் குருடொடு செவிடர், அங்குறு நிலைதீர்ந் தாசனத் திருந்தோர் துகில்போர்த்தா லயம்வலஞ் செய்தோர், முங்கு தீர்த் தத்தின் மண்ணெடு குளித்தோர் மூங்கைநோய் தரித்திர ரோகர்.

தாதைதா யாசா னிவரொடும் பகைத்தோர் சர்வாங்க வாயுரோ கத்தர், வேதியர் பொருண்மேல் வேசைமே லுள்

ளம் வைத்தவர் சலப்பிர மேகர், ஏதிலார் மனம்பீ டிக்கவே செய்தோ ரின்னற்சீ தச்சுர ரோகர், ஆதியான் மடத்திற் றம்பல முமிழ்ந்தோ ரருந்தொண்டை யடைப்புநோ யாளர்.

சிவனிடத் துதிக்கு மூவரை நிந்தை செப்பினோர் வியாதி சேர் வயிற்றர், நவமுறு கோயிற் சுற்றினிற் கணிகை நாரிய ரொடுகளிப் புற்றோர், தவமுற மலச லாதிகள் கழித்தோர் தலை மயிர் கோதியே முடித்தோர், பவமெனு தெச்சி லுமிழ்ந்துளோர் பிதற்றும் பழிபடும் பெரும்பித்த ரோகர்.

கோயிலுட் டுயின்றோர் தலையிடி மண்டை நோயினர் குல வுதிர்த் தத்தின், வாயினீர் மூக்குச் சிந்தினோ ரிரத்த பீனசர் நந்தன வனத்தில், ஏயுற வெச்சி லுமிழ்ந்தவர் தாலு வாதத்த ரிருந்தவ ரறத்தல், ஆயுநற் றேவ ரிவருக் கன் பில்லோ ரற்புத வாயுவாய்க் கோணர்.

## சிதம்பரபுராணம்.

அலைபுனல்வேணியண்ணலாலயந்தன்னிலென்றுந்
தலைமயிரிறக்கிக்கோடறருக்கின்மெய்பிடித்துக்கோடல்
குலதிலதயிலம்வார்த்துக்கோடலாபத்துற்றுலு
மலசலநீக்கலுந்தும்வாகனத்தேறிச்சேறல்.

அடிசினீரடைக்காயாதியானவை துய்த்தறுப்பல்
கொடியகாமாதிமாதர்கூட்டங்கள்கொடுங்கோள்பொய்மை
கடியபொல்லாமைகூறல்கம்பளாதியினிருத்தல்
நெடியபோர்ச்சதுரங்காதிசூதிவைநிகழ்த்தியாடல்.

சொற்றநின்மாலியத்தைச்சோமசூத்திரத்தைத்தூபி
நற்றடநிழலைக்கண்டுநடந்துமுன்கடந்துபோதல்
கற்றைவார்சடையானுக்குங்கதிர்ப்பலிபீடத்துக்கும்
உற்றநன்னடுவேசேறலொழிந்தவருயர்ந்தோரன்றே.

ஆதியாலயத்துட்கூவலாவியாதியதீர்த்தத்தைத்
தீதுபோய்ப்புரிதலந்தச்சிறப்புறுஞ்சிவதீர்த்தத்திற்
கோதுறுமசுத்தத்தோடுமூழ்குதல்குற்றமென்றே
ஓதியவாகமங்களுபநிடதங்களன்றே.

## அருணகிரிபுராணம்.

தென்றிசையிற் றுவாரத்தைத் திகழ்பூர்வ திசைதன்னை நோக்கருந் தேவர்க், கென்றுமிடப் பால்பணியே விருந்திபம் பேல் செபந்தனையு மிடப மீசன், என்றவிவ ரிருவருக்குங் குறுக்கியங்கேல் புறங்காட்டேல் விருகை யல்லால், ஒன்றவொரு கரங்குவியேல் வலந்தன்னை யிடந்தன்னை யொருகாற் செய்யேல்.

உத்தரியத் தொடுபணியே லோங்கியகோ புரச்சாயை கடவே லுண்ணேல், நித்திரைசெய் யேல்கடவே ளின்மாலி யந்தனையுந் தீண்டே னீட்டிக், கைத்தலத்தால் விக்கிரகங் களைத்தீண்டேல் காதலுறக் கணிகை மாரை, அத்தமத னூற்றீண்டே லவரொடுபே சேல்விழியா லவரைப் பாரேல்.

வீண்பேசேல் சபைக்கருக மல்லாத சொல்விளம்பேல் விளம்பிற் கேளேன், மாண்பாருத் தமரையவ மதியேல்புல் லியர்தம்மை மதித்துக் கூறேல், காண்பூர்கள் கணுக்கினிய கடவுளரும் பொருளினைக்கா தலித்துப் பாரேல், ஏண்பூண்ட விருக்காதி தனிலியம்பாச் சிறுதெய்வம் பணியே லென்றும்.

அருமறையா தியும்பயிலே லுன்னததா னத்திலிரே லமரேல் பீடத், தொருவரைப்பார்த் துறநகையே லூடன்முதற் குத்திரத்து ளொன்றுஞ் செய்யேல், வரமுடைய வியலன்றி மற்றையபா டலைமனத்தின் மதித்துக்கேளேல், திரிவிதமா கியசந்தி யல்லாத காலத்தா லயத்துட் செல்லேல்.

வலமிரண்டொன் றிவைபுரியேல் வரமான பாடலொடு பண்ணை யன்றிப், புலியவிய லொடுபொருந்தும் புறநீர்மை

முதற்பண்ணும் புரிந்து பாடேல், சொலியவிவை யெண்ணுன்கு ளொருகுற்றந் தனைச்செய்யிற் றுயக்கத்தாலே, நிலவுமரு மறை தன்னு ளுருத்திரத்தை நிகழ்த்தலுமம் மாசு நீங்கும்.

அருமறையின் வாக்கியம்ப வருகரல்லா ரறைந்திடுக வகோரந் தன்னைக், கருதியுளத் தாயிரமக் கரிசொழியும் புத்தியினுற் கருதிச் செய்தார், எரிநிரயத் தழுந்திடுவ ரிதற்கில்லை பரிகார மியலு ளிந்தத், துரிசுதனைத் துயக்கத்தாற் புரியற்க விழைவாலே துய்யோர் தாமே.

## ஆசாரக்கோவை.

பெரியார் மனையகத்துந் தேவ குலத்தும்
வணங்கார் குரவரையுங் கண்டா—லணங்கொடு
நேர்பெரியார் செல்லு மிடத்து.

## சிவதருமோத்தரம், சுவர்க்கநரகவியல்.

ஈசர்திரு வாலயத்து மிடர்கடியும் புனற்றடத்தும்
வாசமலர்த் திருநந்த வனத்திடைய்யு மடத்தினுளு
மாசுகளைந் தருந்தியன மைதுனமற் றையதொழிலுங்
கூசமறப் புரிகின்ற கொடியாரை மிகக்கொதித்தே.

இக்கெனவே செக்கிடையிட் டியந்திரிப்பர் யமதூதர்
துக்கமுற நரகவித மெனைத்தனைத்துந் தொகுத்தொறுப்பர்
உக்கிரவா ரழனிரயத் தொடுக்கிடுவ ருருகிவிழத்
தக்ககதிர் மதியளவு மவரதனிற் றவிப்பாரே.

ஈசர்திரு வாலயத்து மெழிலுறுநந் தனவனத்து
மோசகனை மலமதனை மூத்திரமு முரணழித்துக்
கோசமதிற் பீசமதி லயோமயத்த குறுக்தண்டால்
ஓசையுற நமன்றூதர் நருக்கிமிக வொறுப்பாரே.

அனலொழுகுஞ் சூசிபல வழுத்திடுவ ரவைதம்மிற்
கனலொழுகு மயோமயத்த தண்டமதிற் கண்டகமும்
இனலுறவே குதத்தியற்றிச் சிரத்தின்மிசை யெழவேற்றி
நினைவழிய வலிதொலையக் கடுந்துயர நிறுத்துவரே.

கனலனைய காரவழ லவைதம்மிற் கவிழ்த்திடுவர்
அனலொழுகு தாமிரமு மலறிடவே சொரிவார்கள்
இனையதுயர் மற்றுமுள விந்திரியத் தியற்றிடுவர்
வினையவல மவற்றாலும் விதியிகந்து விளைத்தவர்க்கே.

௪அ. தூரத்திலிருந்து சிவஸ்தலயாத்திரை செய்ய விரும்பினோர் சுபதினத்திலே ஸ்நானஞ்செய்து, நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு, கல்வியறிவொழுக்கங்களாற் சிறந்த சற்பிராமணர் முன்னே கையிலே பவித்திரஞ்சேர்த்தி, "சிவக்ஷேத்திரயாத்திரை செய்யக்கடவேன்" என்று சங்கற்பஞ்செய்து, சிவனடியார்களைத் திருவமுதுசெய்வித்து, தருமநெறியான் வந்த பொருளைக் கைக்கொண்டு, வீட்டினின்றும் புறப்பட்டு, காமம் குரோதம் முதலிய தீக்குணங்கள் எல்லாவற்றையும் முற்றக் கடிந்து, பரான்னம் புசித்தலும் பிறர் கைப்பொருளை வாங்குதலும் இல்லாது, நாடோறும் பஞ்சாக்ஷரசெபம் சிவபூசை தேவாரபாராயணம் சிவதரிசனம் சிவபுராணசிரவணம் மாகேசுரபூசை முதலியவற்றைச் செய்துகொண்டு செல்லக்கடவர். இப்படிச்சென்று, தாங்குறித்த சிவஸ்தலத்தை அடைந்து, தூரத்தே கோபுரத்தை நமஸ்கரித்து, எழுந்து சென்று, அத்தினத்தில் உணவொழிந்து, க்ஷௌரம்பண்ணுவித்துக்கொண்டு, விதிப்படி ஸ்நானஞ்செய்து, பிண்டப்பிரதானம் பண்ணி, உத்தமபாத்திரமாகிய பிராமணருக்குத் தம்மால் இயன்ற தானஞ்செய்து, திருக்

கோயிலிற் சென்று, விதிப்படி சிவதரிசனம் பண்ணி, சிவ பெருமானுக்குத் தம்மாலியன்ற திரவியங்கள் கொடுத்து, வணங்கக்கடவர். இதற்குப் பிரமாணம்:—

## சிதம்பரபுராணம், நியமச்சருக்கம்.

யாதொரு தேயந் தன்னி லிருப்பவர் தில்லை யெய்துங்
காதல்கூர் நியமங் கொண்டு சிவார்ச்சனைக் கடன்கண் முற்றி
மாதவர் மறையோர்க் கேற்ற வந்தனை புரிந்தி றைஞ்சி
ஆதர மல்கப் போற்றி யவரருள் பெற்ற பின்னர்.

கட்டுறு காமமாதி கட்டற விட்டு வட்டை
கிட்டிமற் றியாரி டத்துங் கேண்மைகூ ரடிசில் கொள்ளா
தட்டதன் சொன்றி யென்று மிசைந்தய லார்தங் கையின்
எட்டுணைப் பொருளுங் கொள்ளா திறைபுகழ் பரவி யெய்தி.

சென்றுல கத்துண் மிக்க தில்லையம் பதியி னெல்லை
துன்றியங் கற்றை யுண்டி துறந்துமுண் டிதமு மெய்தித்
தன்றுணைக் கங்கை யாதி சேவிக்குந் தகைமை பூண்ட
பொன்றரு புண்டரீகப் பொய்கையைக் கண்டு போற்றி.

அன்புடன் மூழ்கி யேறி யருட்சிவ லோகத் திற்றன்
றென்புலக் கிழவர் வாழச் செய்வன செய்தே யஃகம்
பொன்புவி கன்னி யன்னம் பசுத்துகில் புகன்ற தான
மின்பொலி சடையாற் பேணும் விளங்குவே தியர்பா னல்கி.

சசு. தானம் வாங்குதற்கு உரிய உத்தமபாத்திர மாவார், வேதாகமங்களையும் சிவபுராணங்களையும் ஓதி உணர்ந்தவர்களாய், பாவங்களை முற்றக் கடிந்தவர்களாய், சந்தியாவந்தனம் சிவபூசை முதலிய கருமங்களைத் தவறாமல் விதிப்படி சிரத்தையோடு செய்பவர்களாய், இல்லறத்தில்

வாழ்பவர்களாய், வறியவர்களாய் உள்ள பிராமணர்கள். இவர்களல்லாத பிறருக்குத் தானஞ் செய்தவர், பத்துப் பிறப்பு ஒந்தியாயும், மூன்றுபிறப்புக் கழுதையாயும், இரண்டுபிறப்புத் தவளையாயும், ஒரு பிறப்புச் சண்டாளராயும், பின் சூத்திரராயும், வைசியராயும், அரசராயும், பிராமணராயும், பிறந்து வறுமையினாலும் நோயினாலும் வருந்தி உழலுவர். ஆதலால், உத்தமபாத்திரமாகிய பிராமணருக்கே தானஞ் செய்தல்வேண்டும். அத்தலத்தில் உத்தமர் இல்லையாயின், தம்மாலியன்ற பொருளை, வேறு தலத்துள்ள உத்தமரைச் சுட்டிச் சங்கற்பித்து உதகங்கொடுத்து, அவரிடத்துக்குக் கொண்டுபோய்க் கொடுத்தல்வேண்டும். அவர் இறந்தாராயின் அவர் புத்திரருக்குக் கொடுத்தல்வேண்டும். அவரும் இறந்தாராயிற் சிவபெருமானுக்குக் கொடுத்தல்வேண்டும். இதற்குப் பிரமாணம்:—

## சேதுபுராணம், சேதுபலச்சருக்கம்.

பன்னுதானத்தைப்பரிப்பவனொழுக்கமும்பயிறவத்தனுமாகி
மன்னுமாமறையந்தமும்புராணமும்வழுவற்வாராய்ந்து
தன்னைநேரிலாச்சங்கரன்முருள்களுஞ்சங்கரிதன்முருளு
முன்னியேயருச்சனைசெயும்பனவனேமொழிந்தபாத்திரமாகும்.

நந்துதுற்றிடுஞ்சேதுவிற்முனமேநல்கினுன்மறையோனும்
இந்தநற்செழும்பாத்திரற்கீகுகவிப்பரிசினனின்றேற்
சிந்தைவைத்ததுசங்கற்பித்துதகஞ்செய்தூர்தனிற்சென்றீக
உந்துநற்பலன்விரும்பினோனதமபாத்திரற்குதவிடலாகா.

ஓதின்மறை யாசார முடையவனே யுத்தமபாத் திரமதாகும்,
ஓதினவன் றனக்கதிகஞ் சூத்திரவன் னம்புசியா துற்றுவாழ்

வோன், வேதமொடு மந்திரங்கள் புராணமிவை கைவந்து விம லன்றன்னைச், சீதரனைப் பூசைபுரிந் தில்லறத்தில் வறுமையுடன் றிகழ்ந்து வாழ்வோன்.

வருணநெறி யாச்சிரம நெறிவழுவா தெஞ்ஞான்று மகிழ்ந்து வாழும், பொருவிலவன் யாவரினு முயர்ந்தபாத் திரனென்றே புகலுநூல்கள், ஒருமையுடன் பாத்திரத்தை யுற்றுணர்ந்தே யின்னவருக் குதவினரேற், றருமமுத லாதியெலா மடைந்து பர மாயகதி தன்னைச் சார்வார்.

உத்தமமாந் தலங்களினு மித்தகையோ ரிடைத்தான முதவல் வேண்டும், அத்தகையோ ரில்லையேற் றுட்டபாத் திரர்தங்கை ய ளித்தான்சென்மம், பத்தொடுமூன் றிரண்டொன்று கோம்பிகர மண்டூகம் பழிசாலின, மைத்தகொடுஞ் சண்டாள னாகிப்பின் சூத்திரனாய் வணிகனாகி.

மன்னாகி மறையவனாய் வறுமைபிணி தனிலுழந்தே வருந்து மண்மேல், அன்னார்கை முன்னீந்த தானபலந் தன்னாலென் றறி கதானம், என்னாளும் பெறவுதவி னிரந்திரந்து மனங்கசிந்தே யியல்பி னேங்கிப், பன்னாளும் புகழ்பெறுசற் பாத்திரன்றன் பாலளிக்க பரிவு கூர்ந்தே.

உத்தமமாங் குணங்குலவு மித்தகையோர் கைத்தான முத வல்வேண்டும், அத்தலத்தி லவரிலரே னிலத்துதக மளித்தவர் கை யளிக்கல் வேண்டுஞ், செத்தவரே யாயினவர் மகற்களிக்க வவரிறக்கிற் சிவனுக் கீக, அத்தமவை மன்னர்புகழ் திலீபவென வசிட்டமுனி யறைதல் செய்தான்.

௫௦. மூன்று நாளாயினும், ஐந்துநாளாயினும், பதி னைந்துநாளாயினும், ஒருமாசமாயினும், ஒருவருடமாயினும், அந்தத்தலத்திலே நாடோறும் சிவதீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி, சிவபூசையும் சிவாலயதரிசனமும் இயன்றமட்டும்

மாகேசுரபூசையும் செய்துகொண்டும், சைவநூல்களை ஆராய்ந்துகொண்டும், வசிக்கக்கடவர். பொருளில்லாதவர் சிவனடியார்களுக்கு ஒருமுட்டி பிச்சையாயினும் கொடுத்துண்ணக்கடவர். தாங்குறித்த நாளெல்லை கடந்தபின், சிவபெருமானை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, திருக்கோயிற்புறத்துவந்து, கோபுரத்தை நமஸ்கரித்துச் சென்று, திருவெல்லையை நமஸ்கரித்து, முன்சொன்ன நியமத்துடனே தம்மூரை அடைந்து, பிராமணபோசனமும் மாகேசுர பூசையும் செய்யக்கடவர். இதற்குப் பிரமாணம்:—

## சிதம்பரபுராணம், நியமச்சருக்கம்.

உற்றவிந்நெறிமுத்தினமைந்தினமோர்பக்கமோர்திங்கண்
மற்றொராண்டுதம்மாயுவினெல்லையவ்வளநகர்வைகிச்சீர்
பெற்றவேதியர்மாதவர்க்கொருமுட்டிபிச்சையாயினுமன்பால்
எற்றைநாளுமிட்டுண்டலேநெறியலாதுண்டலுமியல்பன்றால்.

ஈசனுக்குப்பிழைத்தகொடும் பாவமுதற் பாவங்களியற்றுவதுள்ள, நேசமுறச்சைவநூலாய்ந்துணர்ந்துநின்றநிலைநீங்காதென்றும், பாசவினைப்பகைசாட்வடிவுகொடுசிதம்பரத்துட்பதுமச்செந்தாள், வீசியொருபொருளாடல்கண்டுறைந்தோருள்ளபடிவீடுசேர்வார்.

## சேதுபுராணம், சேதுயாத்திரைச்சருக்கம்.

எந்தை பிரானை யெமையாளு மிராம நாதன் றனைப்புகழ்ந்தாங், கந்தண் மலர்ச்சே வடிவணங்கி யனையோன் பூசை தனக்கான, செந்தண் மலர்சந் தனமுதல சிறப்பி னளித்துத் திகழுமர, விந்தன் முதலோர் தொழும்புனித விடையோ னவன்பால் விடைகொண்டு.

பொன்னந் திகிரிப் படையேந்தும் புரைதீர் சேது மாதவனை
முன்ன ரிறைஞ்சிப் புகழ்நாம மொழிந்துபோற்றி மற்றவன்றன்
மன்னும் பூசைக்குபகரணம்வழங்கியவன்பால்விடைகொடுமுன்
சொன்ன நியமத் துடன்றனது தொல்லைப்பதியின்பாலடைந்து.

அந்த ணாளர்க் கறுசுவையோ டன்பா லடிசி லளித்துவகை
வந்த தான மளித்திடுதன் மரபாம் புனித மாதவத்தீர்
இந்த வாறு புரிந்தோர்க ளிராம நாதன் றிருவருளான்
முந்து சூழ்ந்த பவமனைத்து முடிப்பார் நிரய மூழ்காரால்.

௫௪. பெறுதற்கரிய மனிதப்பிறப்பை உடையர்களாய், மெய்ந்நூல்களாகிய வேதாகமங்கள் வழங்கும் புண்ணிய பூமியாகிய இப்பரதகண்டத்திலே தவஞ்செய் சாதியிலே சைவமரபிலே பிறந்தும், அனேகர் இவைகளின் அருமையைச் சிறிதும் சிந்தியாதும், கருணாநிதியாகிய சிவபெருமானுடைய மகிமையையும் புண்ணியபாவங்களையும் அவைகளின் பலங்களையும் கற்றாயினும் கேட்டாயினும் அறியாதும், பாவங்களை வெறுத்துப் புண்ணியங்களைச் செய்யாதும், தமது வாழ்நாளை வீணாளாகக் கழித்து, எரிவாய் நரகத்துக்கு இரையாகுகின்றார்கள். சிலர் ஒரோவழிச் சில புண்ணியங்களைச் செய்யப் புகுந்தும், அவைகளைச் செய்யும் முறைமையைச் சிறிதும் அறியாமையால், குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொள்ளுதல்போல, பாவத்தையே ஈட்டிக் கொள்ளுகிறார்கள். இப்படிக் கெட்டுப்போகாது, நமது சைவசமயிகள் இம்மனிதப்பிறப்புப் பெறுதற்கரியதென்பதையும், இது நீங்கும் அவதி அறிதற்கரிய தென்பதையுஞ் சிந்தித்து, இந்தப் பிரபந்தத்தை வாசித்தறிந்து, பாவங்களை வெறுத்து, சிவபெருமானுடைய திருவடிகளைத் தங்கள் மனம் வாக்குக் காயங்களினாலே விதிப்படி மெய்யன்போடு

வழிபட்டு, நித்தியமாகிய பேரின்பத்தைப் பெற்றுய்யக் கடவர்கள்.

## பிரமோத்தரகாண்டம்.

கண்ணுதலா யையநோக்குங் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்
பெண்ணொருபா கனைப்பணியுந் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடு நன்னாவே நன்னாப்
பரன்சரிதை யேகேட்கப் படுஞ்செவியே செவிகள்
அண்ணல்பொலங் கழனினைக்கு நெஞ்சமே நெஞ்ச
மவனடிக்கீ ழடிமைபுகு மடிமையே யடிமை.

திருச்சிற்றம்பலம்.